1995 ஏப்ரல் 24]

417—

பள்ளிகளில் ஆங்கிலத்தைப் பாடமொழியாக்குதல்

* **35677**—*திரு கி. தருமலிங்கம்:*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் ஆங்கிலத்தையும் பாட மொழியாக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

(ஆ) அரசாணை (நிலை) எண் 584, கல்வி, நாள் 16-6-1993-ன் படி 1993-94 ஆம் கல்வியாண்டு முதல் ஆங்கில வழிப் பாடப் பிரிவு தொடங்க அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் குக்கிராமங்களில் எல்லாம் எங்களுடைய பிள்ளைகள் தமிழோடு ஆங்கிலமும் சேர்த்துப் படித்து பட்டம் பெற வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் இந்த மாபெரும் ஆணையைப் பிறப்பித்துள்ளமைக்கு நன்றி. அந்த வகையில் அனைத்துப் பள்ளிகளிலும் ஒருசேர ஆங்கிலப் பாடத்தைக் கற்பிக்க இந்தக் கல்வி ஆண்டில் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் இப்படிப்பட்ட திட்டத்தைக் கொண்டுவர அரசு முடிவு எடுக்கவில்லை. ஆனால் தேவைப்படும் பள்ளிகளில் அவர்களிடமிருந்து கருத்துரு வரப்பெற்றால், அதற்கான ஆணைகளை அரசு வழங்கி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 418, திரு. கு. சிவசுப்பிரரமணியன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.